# கும்பகோண சந்தையின் தினசரி விலை நிலவரத்தின் வெற்றிக்கதை:



**ஏ.சவுரிராஜ்,த/பெ. ஆரோக்கிய சூசைபிள்ளை,**
**மணத்திடல், தோப்பு வீதி,**
**திருவையாறு தாலூகா,**
**தஞ்சாவூர் மாவட்டம்,**
**பின்கோடு: 613104.**
**அலைபேசி: 9976189551.**

---

என் பெயர் சவுரிராஜ், சொந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டததில் உள்ள மணத்திடல் கிராமம். எனக்கு எட்டு ஏக்கர் நிலம் உள்ளது. நான் பொதுவாக பயிரிடுவது நெல் மற்றும் தோட்டக்கலை பயிர் காய்கறிளான கத்தரி, வெங்காயம், மற்றும் வெற்றிலை. பொதுவாக எனது விளைபொருட்களை அருகில் உள்ள சந்தைகளில் அறுவடையின் பொழுது கிடைக்கின்ற விலைக்கு விற்று விடுவேன். பெரும்பாலும் எனது விளை பொருட்களை அருகில் உள்ள இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்று வருவதினால் எனக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. ஏனென்றால் எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு அருகில் உள்ள மொத்த வியாபார சந்தைகளின் சந்தை நிலவரங்கள் தெரிவதில்லை.

ஒரு முறை நான் “தினகரன்” செய்தித்தாளை ஆகஸ்ட் 2009ல் படிக்க நேர்ந்தது. அப்பொழுது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முயற்சியால் விரைவில் கெட்டுவிடக்கூடிய பொருட்களுக்கு மொத்த மற்றும் சில்லறை விலை நிலவரங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தின் மூலமாகவும், குறுந்தகவல்களை அலைபேசி மூலமாகவும் வழங்குவதை அறிந்தேன். அது முதல் நான் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தினை எனது நண்பரின் வீட்டில் உள்ள கணினி மூலம் பார்த்து எனது விளை பொருட்களை விற்றேன்.

மேலும் நான் கும்பகோணம் செல்லும் பொழுது எல்லாம் அங்குள்ள ஒரு வெற்றிலைக்கான ஒரு மொத்த வியாபாரியை சந்தித்து வந்நேன். நான் இந்த

வருடம் ஒரு ஏக்கர் வெற்றிலை பயிரிட்டுள்ளேன். அது தற்பொழுது அறுவடை செய்யும் நிலையில் உள்ளது. நான் இப்பொழுது அறுவடை செய்த வெற்றிலைகளை தினசரி திருச்சி மற்றும் கும்பகோணம் மொத்த வியாபாரி சந்தை நிலவரங்களை அறிந்து கொண்டே விற்கிறேன். இதனால் என்னால் வெற்றிலைகளை லாபகரமான விலையில் விற்கிறேன் மற்றும் தினசரி ஒரு நல்ல வருமானத்தை உணர்கிறேன். மேலும் நான் எனது அலைபேசி எண்னை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டேன். வேளாண் விரிவாக்க இயக்குணரகம் கும்பகோணம் சந்தை தினசரி நிலவரங்களை குறுந்தகவல்களாக வழங்குகிறது.

இப்பொழுது எங்களைப் போன்ற விவசாயிகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளின் மூலம் விளை பொருட்களுக்கு சரியான விலையையும் மேலும் நல்ல வருமானத்தையும் பெறமுடிகிறது. இதற்காக நான் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத் துறை இணக்குணரகத்திற்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இடம்: மணத்திடல்

இப்படிக்கு

நாள்: 30.09.2009

(ஏ.சவுரிராஜ்)